



Signature Not Verified
Signed by: Assistant Director
Location:Cuddalore
Date:2025.02.20 18:28

அளவர் உதவி வரைவாளர் | வரைவாளர் நிலை | மேற்பார்வையாளர் வரைவாளர் நிலை

# மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - கடலூர் மாவட்டம்.

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், அண்ணகிராமம் ஊராட்சி ஒன்றியம், திருதுறையூர் கிராமம், சர்வே எண்: **37/22** - ல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம்.

அளவு: 1 அங்குலம் 33 அடி (1:400)

இணையதள விண்ணப்ப எண்: SWP/HMUIHK7O/2024/CUDD

வ

| | |
|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் எல்லை - | |
| நிலையிலுள்ள சாலை - | |
| மனைப்பிரிவு உத்தேச சாலை - | |

கோரிய மனைகள் : 07

ஒதுக்கிய மனைகள் : 07

## பரப்பளவு விவரம்

மனைப்பிரிவின் மொத்த பரப்பு : **1,223.00** ச. மீ (**0.30** ஏக்கர்)

சாலை (ம) மூலை முடக்கு பரப்பு : **188.10** ச. மீ

முடக்கு பரப்பு நீங்கலாக மனைப்பிரிவின் பரப்பு : **1034.90** ச. மீ

(குறிப்பு - அனைத்து அளவுகளும் மீட்டரில் குறிப்பிடபட்டுள்ளது)

## பொது ஒதுக்கீடு

உள்ளாட்சிக்கு தானமாக ஆவண எண்: **210/2025** நாள்: **31/01/2025** -ன் படி ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது

மனைப்பிரிவு சாலைகள் (ம) மூலைமுடக்குகள் : **188.10** ச. மீ

உள்ளாட்சி உபயோகம் **(A)** : **12.25** ச. மீ (**1.18%**)

மின் வாரியம் **(B)** : **12.25** ச. மீ (**1.18%**)

பூ ங்கா - ஒதுக்கீட்டிற்கான பரப்பு அரசாணை எண் : 18 ந. நி (ம) கு. வ. து நாள் : 04.02.2019 விதி-47 (6) படி மற்றும் நகர்ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை **ROC NO- 4367/2019/BA-2** நாள் : 05.02.2020 - இன் படி கணக்கீடு செய்து பூ ங்காவிற்கான ஒதுக்கப்பட வேண்டிய பரப்பளவுக்கு நிகரான வழிகாட்டு மதிப்பீடுத் தொகையை மனுதாரர் செலுத்திவிட்டார்.

## கட்டிட வரம்பு

அரசாணை எண்: 18 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, நாள்: 04. 02. 2019 TNCDBR-2019 விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள PLANNING PARAMETER -ன் படி நிபந்தனைக்கு உட்பட்டு அபிவிருத்தி மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## மூலை முடக்கு

12.0மீ. அகல சாலை வரை 1.5மீ. x 1.5மீ. விடப்பட வேண்டும்.

## நிபந்தனைகள்:

1. அரசாணை எண்: **18** நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை (ஆயு-1) நாள். 04.02.2019 மற்றும் அரசாணை எண்: **16** நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள். 31.01.2020 -ன் படி மனைப்பிரிவு சாலைகள் மற்றும் LOCAL BODY ஒதுக்கீட்டினை உள்ளாட்சிக்கும் மற்றும் TANGEDCO ஒதுக்கீட்டினை TANGEDCO அல்லது உள்ளாட்சிக்கும் தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.
2. அரசாணை எண்: **181** வீட்டுவசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள். 09.12.2020 -ன் படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தேவவைய தார் சாலை வசதி, மழை நீர்வடிகால் வசதி, மேல்நிலை தொட்டி, தெருவிளக்கு வசதி மற்றும் இதர வசதிகள் ஆகிய அடிப்படை வசதி மனுதாரால் அமைக்கப்பட்டு அதனை உள்ளாட்சியால் உறுதிசெய்த பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
3. இம்மனைப்பிரிவுக்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜித பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பபடவில்லை என்றும் உள்ளாட்சியால் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
4. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் (ம) பரீசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் (அ) மனைஉட்பிரிவுக்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் ரத்து செய்யப்படும்.
5. விற்பனைகுண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு கடலூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை மாற்றம் எந்தவித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 12மீx6மீ அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
7. நகர் ஊரமைப்புத்துறை சட்டபூ ர்வமாக தொழில் நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிபடுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி - திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.
8. உத்தேச மனைப்பிரிவு சாலைகள் தார் சாலைகளாக அமைக்கப்பட்ட பின்னர் உத்தேச மனைப்பிரிவு சாலைகளின் தரம் குறித்து யூ னியன் பொறியாளரிடமிருந்து தகுதிச்சான்று பெற்று கொள்ளப்பட வேண்டும்.

**SWP/DTCP/CUD/NO - 13/2025** (இணையதள ஒப்புதல் இசைவு செய்யப்பட்டுள்ளது)

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
கடலூர் மாவட்டம்